இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 09-06-2023



# நமது நன்றியின் அடையாளங்கள்!

“ஊர் உறங்கும் வேளையிலும் உள்ள முறங்காதான்
யார் மயங்கு போதினிலும் தான் மயங்கலில்லான்
சீர் விளங்கும் வீரர் புவிப் போர்விளங்க வந்தான்
வீரன் கருணாநிதி எவ்வூரிலுமெழுந்தான்!” - என்று தமிழினத் தலைவர் கலைஞரைப் பற்றி எழுதினார் கவியரசு கண்ணதாசன்!

அத்தகைய தமிழினத் தலைவர் கலைஞருக்கு சூன்- 3 பிறந்த நாள். அதுவும் இந்த ஆண்டு நூறாவது ஆண்டு. கடந்த 3 ஆம் தேதி கொண்டாட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. ஒடிசாவில் நடந்த ரயில் விபத்து 280க்கும் மேற்பட்டவரை பலிவாங்கியது. நூற்றாண்டு விழாவையே தள்ளி வைத்தார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ‘அதனைத்தான் மனிதநேய மாண்பாளரான தலைவர் கலைஞர் அவர்களும் விரும்பி இருப்பார்’ என்று சொன்னார் முதலமைச்சர் அவர்கள்.

பல நேரங்களில் தனது பிறந்தநாளையே கொண்டாடாமல் தவிர்த்தவர்தான் கலைஞர் அவர்கள். ஈழப்பிரச்சினை கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த காலக்கட்டத்தில் பல முறை தலைவர் கலைஞர் அவர்கள் இப்படிச் செய்துள்ளார்கள். பிறந்த நாளின் போது வசூலான பணத்தை ஈழப்போராளி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்தார், (1986) கலைஞர் அவர்கள். 1988 ஆம் ஆண்டு பிறந்தநாள் செய்தியாக, ‘இந்திய ராணுவத்தால் பிரபாகரனுக்கு எந்த ஆபத்தும் ஏற்படுத்தக் கூடாது. போர் நிறுத்தம் செய்து உடனடியாக சுமூக நிலைக்கு வழிகாண வேண்டும் என்றும் பிரதமரைக் கேட்டுக் கொள்கிறேன். இதுதான் எனது பிறந்த நாள் செய்தி’ என்று அறிவித்தார் கலைஞர் அவர்கள். எனவே, கலைஞரின் நூற்றாண்டு விழாவை ஒடிசா மாநிலத்தில் நடந்த கோர விபத்துக்காகத் தள்ளி வைத்ததுகூட கலைஞருக்குப் பெருமை சேர்ப்பதாகவே அமைந்திருந்தது.

**3 ஆம் தேதி நடப்பதாக இருந்த கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா 7 ஆம் தேதி வடசென்னை பகுதியில் பின்னி மில் வளாகத்தில் மாநாடு போல நடத்தப்பட்டுள்ளது. சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான சேகர்பாபுவால் நடத்தப்பட்டது நூற்றாண்டு விழா, அல்ல தொடக்க விழா மாநாடு. “75 ஆண்டுகளுக்கு முன்பு, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு விதை போட்ட பகுதியில் கொள்கை வேர் பரப்பி ஆல் போல் தழைத்து இருக்கும் இந்த இயக்கத்தை வளர்த்துக் காட்டிய தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை சிறப்போடு, நான் எதிர்பார்த்ததை விட மிகப் பிரமாண்டமானதாக நடத்திக் காட்டி இருக்கிறார் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ‘செயல்பாபு’ என்று என்னால் எப்போதும் அழைக்கப்படும் மாண்புமிகு அமைச்சர் சேகர்பாபு அவர்கள்.” என்று தலைவர் அவர்கள் மேடையிலேயே பாராட்டினார்கள். கலைஞரின் விஞ்சுபுகழ் அனைத்தையும் நெஞ்சுக்கு நெருக்கமாகக் கொண்டு வந்து மனக்கண் முன்னால் நிறுத்தியது இந்த தொடக்கவிழா மாநாடு.**

தொண்டர்கள் படை சூழ, தோழமைக் கட்சித் தலைவர்கள் அணி சேர்க்க நடந்த விழா, அடுத்து வருகின்ற 12 மாதமும் எத்தகையதாக விழாக்கள் அமைய வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

“ஓராண்டு முழுவதும் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை - அவர்களின் நூற்றாண்டு விழாவை நாம் கொண்டாட இருக்கிறோம். இந்தக் கொண்டாட்டங்களின் மூலமாக தலைவர் கலைஞருக்கு இதுவரை கிடைக்காத புதிய புகழைச் சேர்க்கப் போகிறோம் என்பதல்ல; நாம் – நம் நன்றியின் அடையாளமாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்! “ என்று சொல்லி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். ‘நன்றி என்பது செயல் செய்தவர்கள் எதிர்பார்க்க வேண்டியது அல்ல, பலன் பெற்றவர்கள் காட்ட வேண்டியது’ என்பார் தந்தை பெரியார். அந்த வகையில் தலைவர் கலைஞர் அவர்களால் பலன் பெற்ற தமிழ்நாடு காட்ட வேண்டிய நன்றி அறிவிப்பு விழாக்களாகவே கலைஞரின் நூற்றாண்டு விழாக்கள் அமையப் போகின்றன. தோழமைக் கட்சித் தலைவர்கள் அனைவரும், ஐந்து முறை முதலமைச்சராக இருந்தபோதும் தலைவர் கலைஞர் அவர்கள் செய்த சாதனைகளைத்தான் அதிகமாக பட்டியலிட்டார்கள்.

சாதனைகளைச் செய்வதிலும் சாதனை படைத்தவர் கலைஞர். அவர் செய்த சாதனைகள், சொல்லி முடியாதவை. ஒரு துறை அல்ல, அனைத்துத் துறைகளிலும் சாதனை படைத்தார். ஒரு காலக்கட்டத்தில் மட்டுமல்ல, வாழ்ந்த காலம் முழுவதும் சாதனைகள் செய்தார். அகில இந்த அரசியலில் – மிக நீண்ட காலம் வாழ்ந்த தலைவர்கள் அனைவரும் ஒவ்வொரு காலக்கட்டத்தில் ஓய்வெடுத்துக் கொண்டார்கள். பதவிகளுக்கு வரும் போது மட்டுமே பரபரப்பாகக் காணப்படுவார்கள். ஆனால் கலைஞர் அவர்கள் தான் வாழ்ந்த காலம் முழுவதுமே ‘முதலமைச்சரைப்’ போலவே வாழ்ந்தார். ஒன்று அவர் செயலைச் செய்வார். அல்லது செய்ய வைப்பார். இந்த இரண்டு செயல்பாடுகளும் இருந்ததால் எப்போதும் அவர் தலைப்புச் செய்தியாகவே இருந்தார். அவர் செய்த செயல்களை, திட்டங்களை நினைவூட்டினாலே போதும். அதனைத்தான் வலியுறுத்தி இருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**மாநிலத்தை வளர்த்தெடுத்த தலைவருக்கு நானிலம் போற்றும் நன்றிநவிலும் விழாக்களாக அமையட்டும். அவர் வழித்தடத்தில் திராவிட மாடல் ஆட்சி சிறக்கட்டும்!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (8.6.2023) முகாம் அலுவலகத்தில், டாடா குழுமத்தின் தலைவர் என்.சந்திரசேகரன் சந்தித்து பேசினார். உடன் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் உள்ளனர்.

# கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி 5 லட்சம் மரக்கன்றுகள் நடல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டத்தை தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன் 9 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி 5 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மரக்கன்று நட்டு வைத்து தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.6.2023) சென்னை, கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி, 5 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை, மரக்கன்று நட்டு வைத்து தொடங்கி வைத்தார்.

“மரத்தை நாம் வளர்த்தால் மரம் நம்மை வளர்க்கும்” என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சொல்லிற்கிணங்க, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநில நெடுஞ்சாலைகளிலும் 5 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படும் என்றும், இதனால் மாநில நெடுஞ்சாலைகளில் இடைவெளி இல்லாமல் மரங்கள் வளர்க்கப்படும் என்ற இலக்கு எட்டப்படும் என்றும் 2023-2024ஆம் ஆண்டு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடக்க நாளான நேற்றுமுன்தினம் (7.6.2023) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், 5 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை மரக்கன்று நட்டு வைத்து தொடங்கி வைத்தார்.

நேற்றைய தினம் தமிழகமெங்கும் நெடுஞ்சாலை துறையின் 340 சாலைகளில் நடப்படவுள்ள மகிழம், வேம்பு, புளியன், புங்கன், நாவல், சரக்கொன்றை போன்ற வகையைச் சார்ந்த சுமார் 46,410 மரக்கன்றுகள், 24 மாத காலம் வளர்ச்சிக் கொண்டவையாகும். மேலும், பருவமழைக்கு முன்பாகவே 5 இலட்சம் மரக்கன்றுகளையும் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.6.2023) சென்னை, கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி, 5 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை, மரக்கன்று நட்டு வைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறைஅமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் அண்ணாதுரை, நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு தலைமைப்பொறியாளர் இரா.சந்திரசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வீட்டு இணைப்புகளுக்கு எவ்வித மின்கட்டண உயர்வும் இல்லை!

# அனைத்து இலவச மின்சாரச் சலுகைகளும் தொடரும்!

## அரசு அறிவிப்பு!

*சென்னை, ஜூன் 9 -*

*கடந்தகால ஆட்சியில் இருந்த திறனற்ற மேலாண்மையால், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் ஒட்டுமொத்த நிதி நிலை மோசமாக பாதிப்படைந்து இருந்தது.*

*மேலும், ஒன்றிய அரசின் 9 நவம்பர் 2021 ஆணையின்படி மின் எரிபொருள் மற்றும் கொள்முதல் விலை உயர்வினை உடனுக்குடன் நுகர்வோரிடமிருந்து வசூல் செய்வது கட்டாயமாக்கப்பட்டது. மேலும், 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒன்றிய அரசு இட்ட ஆணையின்படி, இந்த விலை உயர்வினை மின் கட்டணத்தை உயர்த்தி நுகர்வோர்களிடமிருந்து மாதந்தோறும் பெற வேண்டும்.*

*இந்த விலை உயர்வினால் ஏற்படக்கூடிய சுமையைக் குறைக்கும் வகையில், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் 09.09.2022 அன்று 2022-23 முதல் 2026 - 27 வரை 5 ஆண்டுகளுக்கான கட்டண உயர்வை பல்லாண்டு மின் கட்டண வகையில் (MYT) வழங்கியது. மேற்படி உத்தரவில் 2022 - 23 ஆண்டுக்கான உயர்த்தப்பட்ட கட்டணத்தை அறிவித்தது.*

*அடுத்து வரும் 4 ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1 முதல் அமலுக்கு வரும் வகையில் கீழ்க்கண்ட கட்டண உயர்வு முறையை அறிவித்தது. அதன்படி, ஆண்டு தோறும், ஏப்ரல் மாதத்திற்கான நுகர்வோர் விலை குறியீட்டு எண்ணை முந்தைய ஆண்டின் ஏப்ரல் மாதத்தின் விலைக் குறியீட்டு எண்ணுடன் (Price Index) ஒப்பீடு செய்து, கணக்கிடப்படும் நுகர்வோர் பணவீக்க உயர்வு (Consumer Price Inflation) அல்லது 6%, இவற்றில் எது குறைவோ அந்த அளவில் மின்கட்டண உயர்வை நடைமுறைபடுத்த வேண்டும்.*

*இதன்படி, 2023 ஜூலை மாதத்தைப் பொறுத்தவரையில், 2022 ஏப்ரல் மற்றும் 2023 ஏப்ரல் ஆகியவற்றின் நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்களின்படி கணக்கிட்டால், 4.7 சதவீதம் மின்கட்டணம் உயர்த்தப்பட வேண்டும். இந்த நடைமுறையை ஆய்வு செய்த முதலமைச்சர் அவர்கள், மாண்பமை ஆணையத்தின் உத்தரவை செயல்படுத்தும் போது பொதுமக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். இதன்படி கட்டண உயர்வு விகிதம் மறுஆய்வு செய்யப்பட்டு, சென்ற ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கட்டணம் உயர்த்தப்பட்ட நிலையில், 2022 ஏப்ரல் மாதத்தின் விலைக் குறியீட்டு எண்ணிற்கு பதிலாக சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் விலை குறியீட்டு எண் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதனால் கட்டண உயர்வின் அளவு 4.7 % லிருந்து 2.18 % ஆக குறைக்கப்பட்டது. இந்த குறைந்த உயர்விலிருந்தும் பொதுமக்களை பாதுகாக்கும் நோக்கோடு, வீட்டு இணைப்பு நுகர்வோருக்கு ஏற்படும் 2.18 % உயர்வையும் தமிழ்நாடு அரசே ஏற்று, மின் வாரியத்திற்கு மானியமாக வழங்கிட முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.*

*இந்த முடிவால்*

*அ) வீட்டு இணைப்புகளுக்கு எவ்வித கட்டண உயர்வும் இருக்காது.*

*ஆ) வேளாண் இணைப்புகள், குடிசை இணைப்புகள், வீடுகளுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம், கைத்தறி, விசைத்தறிகள் போன்றவைகளுக்கு அளிக்கப்படும் இலவச மின்சாரச் சலுகைகள் தொடர்ந்து வழங்கப்படும்.*

*(இ) வணிக மற்றும் தொழில் அமைப்புகளுக்கு மட்டுமே யூனிட் ஒன்றிற்கு 13 பைசா முதல் 21 பைசா வரை மிகக் குறைந்த அளவில் மின்கட்டணம் உயரும்.*

*இந்த ஆண்டு நமது நாட்டின் பிற மாநிலங்களில் வீட்டு இணைப்புகள் உள்ளிட்ட அனைத்து மின்இணைப்புகளுக்கும் மின் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த உயர்வுகளோடு ஒப்பிடும் போது மகாராஷ்டிரா (62 பைசா/யூனிட்), கர்நாடகா (70 பைசா/யூனிட்), அரியானா (72 பைசா/யூனிட்), மத்திய பிரதேசம் (33 பைசா/யூனிட்), பீகார் (147 பைசா/யூனிட்) தமிழ்நாட்டில் வீட்டு மின் இணைப்புகளுக்கு மின்கட்டணங்கள் எவ்விதமும் உயர்த்தப்படாதது மட்டுமன்றி, வணிக மற்றும் தொழில் மின்இணைப்புகளுக்கும் மிகக்குறைந்த அளவிலேயே கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.*

*இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.*